# 2026 GROUP – II & IIA TEST – 6
## General Tamil Explanations

1. **விடை : A**

**நான்மணிக்கடிகை – விளம்பிநாகனார்**

- குடும்பத்தின் விளக்குப் பெண்ணாவாள்.
- அப்பெண்ணுக்கு விளக்கினைப் போன்றவர்கள். அவள் பெற்ற பண்பில் சிறந்த பிள்ளைகள்.
- மனத்திற்கினிய அன்புமிக்க அப்பிள்ளைகளுக்கு விளக்கினைப் போன்றது கல்வி.
- அக்கல்விக்கு விளக்காக விளங்குவது எதுவென்றால், அவர்களிடம் உள்ள நல்லெண்ணங்களே.

2. **விடை : C**

**ஆசாரக் கோவை**

நன்றி அறிதல் பொறையுடைமை, இன் சொல்லோடு
இன்னாத எவ் உயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல் இனத்தாரோடு நட்டல் - இவை எட்டும்
சொல்லிய ஆசார வித்து.

**பாடலின் பொருள்**

தனக்குப் பிறர் செய்த நன்றியறிதலும், பொறையும், இன்சொல்லும், எல்லா உயிர்க்கும் இன்னாதன செய்யாமையும், கல்வியும், ஒப்புரவை மிக வறிதலும், அறிவுடைமையும், நல்லினத்தாரோடு நட்டலும் என இவ்வெட்டு வகையும் நல்லோராற் சொல்லப்பட்ட ஆசாரங்கட்குக் காரணம்.

3. **விடை : C**

- தான்செல் உலகம் என்ற சொல்லின் பொருள் – மறுமை உலகம்

4. **விடை : D**

**இலக்கணக் குறிப்பு :** நெல்லுங் கரும்பும் - எண்ணும்மை

5. **விடை : D**

உண்டி அருக்கும் என்ற சொல்லின் பொருள் உணவை சுருக்கிக் கொள்ளுதல்.

6. **விடை : A**

நட்டார் என்பதன் எதிர்ச் சொல் செற்றார் (பகைவர்)

7. **விடை : C**

- கள்வம், செய்வம் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு தன்மை பன்மை எதிர்கால வினைமுற்றுகள்.

8. **விடை : C**

**நான்மணிக்கடிகை**

கள்வம் என்பார்க்கும் தயில்இல்லை காதலி மாட்டு உள்ளம் வைப்பார்க்கும்
தமில்இல்லை ஒண்பொருள் செய்வம் என்பார்க்கும் துயில்இல்லை அப்பொருள்

SHANKAR IAS ACADEMY

காப்பார்க்கும் இல்லை துயில் இல்லை அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில்.

**பாடலின் பொருள்**

- கள்வர்களுக்கும் தூக்கம் இல்லை. தலைவியை விரும்பும் தலைமகனுக்கும் தூக்கம் இல்லை. செல்வத்தை ஈட்டுபவனுக்கும் தூக்கம் இல்லை. அச்செல்வத்தைத் திருடு போகாது காப்பவனுக்கும் தூக்கம் இல்லை. எனவே நிலையில்லாப் பொருள்களின்கண் நாட்டம் கொள்ளாமல் மெய்ப்பொருளைத் தேடியடைவதே மனிதவாழ்வின் நோக்கமாகும்.

9. **விடை : B**

**நான்மணிக்கடிகை**

- நான்மணிக் கடிகை, இதில் கடிகை என்றால் அணிகலன் என்பது பொருள். நான்கு வகையான மணிகளால் கோக்கப்பட்ட ஒருவகை அணிகலனைப்போல் பாடல்தோறும் நான்கு நீதிகளைக் கொண்ட நூற்று நான்கு வெண்பாக்களால் ஆன நூலாகும். இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- ஒவ்வொரு பாட்டும் நான்கு அறக்கருத்துகளைக் கூறுகின்றது. இதில் மாணவர்தம் பருவத்திற்கேற்ற நீதிகளும் உண்மைகளும் மிளிர்வது சிறப்பாகும்.
- நிலையாமை என்னும் கருத்தை அறவிலக்கியங்களும் குறிப்பிடுகின்றன நிலையில்லாப் பொருளைத் தேடியலையும் மனித வாழ்வைப் பொருளற்றது என்கிறது நான்மணிக்கடிகை.

10. **விடை : B**

- வைப்புழி என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு ஏழாம் வேற்றுமைத்தொகை

11. **விடை : B**

**நாலடியார்**

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயின் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

**பாடலின் பொருள்**

- கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது. ஒருவற்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது. ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகா.

12. **விடை : D**

**பழமொழி நானூறு**

நற்குடியில் பிறவாதவர் இயல்பு
உரைசான்ற சான்றோர் ஒடுங்கி உறைய
நிறையுளர் அல்லார் நிமிர்ந்து பெருகல் வரைதாழ் இலங்கருவி வெற்ப! அதுவே
சுரையாழ அம்மி மிதப்பு. (பாடல்-125)

**பொருள்**

- மலையினின்றும் விழுகின்ற ஒளிவிளங்கும் அருவியை உடைய மலை நாடனே! புகழ் நிறைந்த குடியிற் பிறந்த அறிவு நிறைந்தவர்கள் வறுமையால் வருந்திநிற்க நல்ல குடிமரபின் வரிசையில் சேராதவரான கீழோர் செல்வத்தால் தலைநிமிர்ந்து பெருகுதல்



SHANKAR IAS ACADEMY

ஆகிய அது, நீரிலே சுரைஆழ்வதையும் அம்மி மிதப்பதையும் ஒக்கும். (க-து.) நற்குடிப் பிறவார் செல்வத்தால் தருக்கி நிற்பர். 'சுரை ஆழ அம்மி மிதப்ப' என்பது பழமொழி.

13. **விடை : B**

**நாலடியார்**

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி – எடுத்துக்காட்டு உவமை அணி.

14. **விடை : D**

கல்வி கரையில கற்பவர் நாள்சில மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

**பாடலின் பொருள்**

- கல்வி அளவில்லாதது; எல்லையற்றது; முடிவற்றது; ஆனால், கல்வி கற்பவர் வாழ்நாட்களோ சிலவாகும்.
- சற்று பொறுமையாக நினைத்துப்பார்த்தால் அச்சில வாழ்நாட்களில் பிணிகள் பலவாயிருக்கின்றன.
- பாலுடன் நீரும் கலந்து இருக்கும்போது, அதிலிருந்து நீரை நீக்கிப் பாலை மட்டும் தனித்துப் பிரித்து அருந்தும் அன்னப் பறவையைப்போல, அறிவுடையோர் பயனற்ற நூல்களைத் தவிர்த்து, கற்கத்தகுந்த சிறந்த நூல்களை மட்டுமே ஆராய்ந்து கற்பார்கள்.

15. **விடை : D**

- திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்மன் - இத்தொடரில் பயின்று வந்துள்ள வழுவமைதி - **திணை வழுவமைதி**

16. **விடை : C**

**திரிகடுகம்**

**நல்வினையைக் கட்டுங் கயிறு**

தானங் கொடுக்குந் தகைமையு மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமுற் தெற்றெனப்
பல்பொரு ணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க் குங் கயிறு.

17. **விடை : A**

தூற்றின்கண் தூவிய வித்து - இத்தொடரில் 'புதர்' என்னும் சொல்லின் பொருள் புதர்

18. **விடை : A**

**சிறுபஞ்சமூலம்**

**நூற்குறிப்பு**

- சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.



SHANKAR IAS ACADEMY

- இதன் ஆசிரியர் காரியாசான். இந்நூலில், கடவுள் வாழ்த்துடன் தொண்ணூற்றேழு வெண்பாக்கள் உள்ளன.
- கண்டங்கத்தரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து மூலிகையின் வேர்களும் உடல்நோயைத் தீர்ப்பன.
- அதுபோல, இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஐந்து கருத்தும் மக்கள் மனநோயைப் போக்குவன.
- ஆகையால், இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது.

19. **விடை : C**

**சிறுபஞ்சமூலம்**

பொருள்போக மஞ்சாமை பொன்றுங்காற்
போர்த்த அருள்போகா வாரறமென் னைந்தும் இருள்தீரக்
கூறப்படும் குணத்தான் கூர்வேல்வல் வேந்தனால் தே
றப்படும் குணத்தி னான்.

**பாடலின் பொருள்:**

- பொருள், இன்பம், இடுக்கண் வந்த காலத்து அஞ்சாமை, பிறிதோர் உயிரின் துன்பங்கண்டு
- இரங்குதல், நிலையான அறம் ஆகிய ஐந்தும் உடையவன் நல்ல அரசனாகச் செயலாற்றுவதற்குரிய தகுதியுடையவனாகிறான்.
- மக்களைக் காப்பது அரசனின் கடமை. மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்பது ஆன்றோர் வாக்கு.

20. **விடை : C**

**ஏலாதி - அன்புடையார்க்கு உள்ள ஆறு குணங்கள்**

சாதல் பொருள்கொடுத்தல் இன்சொல் புணர்வுவத்தல்
நோதல் பிரிவில் கவறலே - ஓதலின்
அன்புடையார்க்(கு) உள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து.

**பாடலின் பொருள் :**

- நண்பர் இறந்தபோது பிரிவாற்றாமையால் தாமும் இறத்தல்,
- நண்பருக்கு வறுமை வந்தபோது பொருள் கொடுத்து உதவல்,
- நண்பருக்கு எஞ்ஞான்றும் இனியசொற்களையே கூறுதல்,
- நண்பருடன் எப்போதும் கூடியிருத்தல்,
- நண்பர் வருந்துங்கால் தாமும் வருந்துதல்,
- நண்பர் பிரிய நேரின் கவலைப்படுதல் எனும் ஆறு குணங்களும் ஒரு சிறந்த நண்பனுக்கு அமைந்திருந்தால் நண்பரின் வாழ்வு பிரகாசமாக விளங்கும்;

21. **விடை :D**

**பழமொழி நானூறு - நூல் குறிப்பு:**

- மக்கள்தம் பட்டறிவால் பெற்ற கருத்தைச் சுருக்கமாகக் கூறியதே பழமொழி யாகும். பழமொழியை முதுரை, முதுமொழி, உலக வசனம் எனவும் கூறுவர்.
- ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு பழமொழி இடம் பெறுமாறு பாடப்பெற்ற நானூறு வெண்பாக்களைக் கொண்ட நூல 'பழமொழி இதனைப் பழமொழி 'நானூறு' எனவும் குறிப்பிடுவர்.

SHANKAR IAS ACADEMY

- இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.
- இது தமிழறிஞர்களால் நாலடியாருக்கு இணையாக வைத்து மதிக்கப்படுகிறது.
- எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர், தமிழகத்தில் வாழ்ந்த மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கம், மன இயல்பு ஆகியவற்றை அறிவதற்குரிய செய்திக்குறிப்புகளை வழங்குகிறது.

22. **விடை : C**

- கடல்சூழ்ந்த இவ்வுலக மக்கள் அனைவர்க்கும் கற்றலைவிட ஒழுக்கமுடைமையே சிறந்தது.
- பிறர்க்கு அன்புகாட்டுவதிலும் செயல்களால் அவர் போற்றும்படி நடத்தலே மேலானது.
- அறிவுநுட்பத்தினும் கற்றபொருளை மறவாமை மேன்மையானது.
- வளமான வாழ்க்கையைக்காட்டிலும் வாய்மை உடையவராக வாழ்வது உயர்ந்தது.
- இளமையைக் காட்டிலும் நோயற்ற வாழ்வே சிறந்தது.
- அழகுடையவராக இருப்பதினும் நாணமுடையவராக இருப்பதே மேலானது.
- குலப்பெருமையைவிட ஒழுக்கமுடைமையே சிறந்தது.
- சிறந்த நூல்களைக் கற்றலைவிடவும் கற்றறிந்த பெரியாரைப் பின்பற்றி யொழுகுதல் சிறப்பானது.
- பகைவரைத் தண்டிப்பதனைவிட, அவருக்கு நன்மைசெய்தல் சிறந்தது.
- முற்காலத்துப் பெருகிய செல்வத்தைப் பின்னர்க் குறைவுபடாமல் காத்தலே சிறந்தது.

23. **விடை :D**

**<u>அறவுரைக் கோவை என அழைக்கப்படுவது முதுமொழிக் காஞ்சி</u>**

**<u>சிறந்த பத்து</u>**

**<u>| (சிறந்ததெனக் கூறப்படும் பத்துப் பொருளைத் தன்னகத்தே கொண்டிருப்பது சிறந்த பத்து)</u>**

1. ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
   ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை.
2. காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.
3. மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை.
4. வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை.
5. இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை
6. நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.
7. குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று.
8. கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.
9. செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று.
10. முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று

24. **விடை : A**

- சென்னீர் அருவி மலைநாடர் பாய்பவோ என்னும் பாடலில் 'பாய்வவோ' என்பதில் உள்ள 'ஓ, என்ற எழுத்து வினாப் பொருளைக் குறிக்கிறது.

25. **விடை : B**

SHANKAR IAS ACADEMY

- முதுமொழிக் காஞ்சியில், ஒருவரைத் தண்டிப்பதை விட மேலானது அவருக்கு நன்மை செய்வது என மதுரைக் கூடலூர்கிழார் குறிப்பிடுகிறார்.

26. **விடை : C**
- திரிகடுகம் - நல்லாதனார்
- திணைமாலை நூற்றைம்பது - கணிமேதாவியார்
- பழமொழி நானூறு - முன்றுரை அரையனார்.
- நல்வழி - ஔவையார்
- சிறுபஞ்சமூலம் - காரியாசன்

27. **விடை : D**
**ஏலாதி**
- ஏலம் + ஆதி ஏலாதி. நான்கடிகளில் ஆறு அருங்கருத்துகளை இந்நூல் நவில்கிறது.
- இந்நூல் தமிழருக்கு அருமருந்து போன்றது.
- ஏலம் என்னும் மருந்துப்பொருளை முதன்மையாகக்கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்பது பெயர்.
- இம்மருந்து, உண்ணுபவரின் உடற்பிணியைப் போக்கும்.
- அதுபோல, இந்நூலின் நற்கருத்துகள், கற்போரின் அறியாமையை அகற்றும்.

28. **விடை : C**
- ஏலாதி சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட எண்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது. சிறந்த அறநெறிகளைக் கூறுகிறது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

29. **விடை : D**
**திரிகடுகம்**
இல்லார்க்கொன் றீயும் உடைமையும், இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் – எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள.
**பொருள்**
- வறியவர்க்குப் பொருளை அளித்தல், இவ்வுலகத்துப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல், எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலையில் வாழ்தல் என்னும் இம்மூன்றும் அறவழியில் நடக்கும் மக்களுக்கே என்றும் உண்டு.

30. **விடை : B**
- இல்லார்க் கொன் றீயும் - இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர் எண்ணலளவை ஆகுபெயர்.
- எண்ணல் அளவை ஆகுபெயர்
- எண்ணைக் குறிக்கும் பெயர், தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எண்ணல் அளவை ஆகுபெயர் எனப்படும்.

  (எ.கா) நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.



SHANKAR IAS ACADEMY

31. **விடை : D**

**திரிகடுகம்**

**நல்வினையைக் கட்டுங் கயிறு**

தானங் கொடுக்குந் தகைமையு மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமுற் தெற்றெனப்
பல்பொரு ணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க் குங் கயிறு.

**பாடலின் பொருள்**

- தானத்தை கொடுக்கின்ற பெருஞ் செய்கையும், பழிக்கு நாணுதலுடையாரின் குற்றத்தை நீக்கிய நல்லொழுக்கமும்; தெளிந்த பல விடயங்களிலும் தீமைகள் நீங்கிய எண்ணமும் ஆகிய இம்மூன்றும் நல்ல அறத்தின் பயனை நீங்காதபடி கட்டுகின்ற கயிறாகும்.

32. **விடை : B**

- பிறர் தன்னை உயர்த்திப் பேசும் போது தகாது என்று நாணுதல் ஒரு சான்றோரின் இயல்பு என திரிகடுகம் குறிப்பிடுகிறது.

33. **விடை : C**

- செயல்வலி அற்ற ஏவலான் என்பதன் பொருள் சோம்பேறியான பணியாள்

34. **விடை : D**

**மூதுரை**

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத் தன்தேசம் அல்லால் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

35. **விடை : C**

'இல்லோர் ஒக்கல் தலைவன்' என்ற அடிகளால் சிறப்பிக்கப்படுபவர் அதியமான்.

36. **விடை : B**

- ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.
- தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது.
- அதைத் தவிர ஐயம், உறுதியாகக் கூறமுடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை - அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.
  (எ.கா)
  - இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)
  - பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள். (இது அல்லது அது)
  - பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை – அதுவும் இல்லை)

37. **விடை : C**

மடமை என்ற சொல்லின் எதிர்ச்சொல் <u>புலமை</u>

SHANKAR IAS ACADEMY

38. **விடை : A**

- பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் தன்மையை மிகுதிப்படுத்த வருவது உரிச்சொல் ஆகும்.
- மாநகர் - மாநகர் என்னும் சொல்லிலுள்ள மா என்பது உரிச்சொல் ஆகும்.
- இதன் பொருள் பெரிய பலவகைப்பட்ட பண்புகளைக்கொண்டு பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களைவிட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன உரிச்சொற்கள். (எ.கா.)
  - மா - - மாநகரம்
  - சால - சாலச்சிறந்தது

39. **விடை : D**

- கடி - இவ்வுரிச்சொல், காப்பு, கூர்மை, நாற்றம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு எனப் பல குணங்களைக் குறித்து வரும் ஓர் உரிச்சொல்.

40. **விடை : A**

**ஏவல் வினைமுற்று**

- ஒரு செயலைச் செய்யுமாறு கட்டளையிடுவது ஏவல் வினைமுற்று .
  (எ.கா)
  - பாடம் படி
  - கடைக்குப் போ

- இவ்வாறு தன்முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும்.
- ஏவல் வினைமுற்று ஒருமை, பன்மை ஆகிய இருவகைகளில் வரும்.
  (எ.கா.)
  - எழுது - ஒருமை
  - எழுதுமின் - பன்மை
- பன்மை ஏவல் வினைமுற்று எழுதுங்கள் என வருவது இக்கால வழக்கு.

41. **விடை : D**

| **பிழை** | – | **திருத்தம்** |
|---|---|---|
| ➢ அருகாமை | – | அருகில் |
| ➢ இருப்பவன் யார் | – | இருப்பவன் யாவன் |
| ➢ அறுவறுப்பு | – | அருவருப்பு |

42. **விடை : A**

| **சொல்** | | **பெயர்** | | **வினை** |
|---|---|---|---|---|
| பிந்து | - | துளி | - | பின்னிடு |
| வசி | - | கூர்மை, வாள் | - | தங்கு |
| பூரி | - | கலப்புநெல், பொன் | - | பெருகு,தமிழ் |

SHANKAR IAS ACADEMY

43. **விடை : C**

- பழு என்ற சொல்லின் பொருள் விலாஎழும்பு, ஏணி

44. **விடை : A**

**மரபுத் தொடர் – பொருள்**

பஞ்சாய் பறத்தல் - அலைந்து திரிதல்
அவசரக் குடுக்கை எண்ணித துணியாதார்
தாளம் போடுதல் - எதைச் சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல்
கொட்டியளத்தல் - மிகுதியாகப் பேசுதல்.

45. **விடை : C**

- 'ஆசிரியர் கற்பிக்கும் போதே ஐயங்களைக் கேட்டுத் தெளிதல் மற்றும் இளமையிற் கற்பது' போன்ற சொற்றொடரின் பொருளை உணர்த்தும் பழமொழி – காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

46. **விடை : B**

- Intransitive Verb – செயப்படுபொருள் குன்றிய வினை
- Passive Voice – செயப்பாட்டு வினை
- Active voice – செய்வினை
- Predicate – பயனிலை

47. **விடை : B**

- Thesaurus என்ற சொல்லின் பொருள் தொகைச்சொல் நிகண்டு

48. **விடை : C**

- ஈரறிவு உயிரினம் - சிப்பி
- மூன்றறிவு உயிரினம் - எறும்பு
- நான்கறிவு உயிரினம் - தும்பி

49. **விடை : D**

- விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று, தன்மை இடத்தில் வராது.
- இயர், அல் ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கில் இல்லை. செய்யுள் வழக்கில் மட்டுமே உள்ளன.

50. **விடை : D**

- வேற்றுமைப்புணர்ச்சியில் 'ல'கரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் 'ற' கரமாகத் திரியும்.
- 'ள'கரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் 'ட' கரமாகத் திரியும்.

51. **விடை : C**

**நேரிணைச் சொற்கள்**

கண்ணுங்கருத்தும் பச்சைப் பசேல்
பேரும் புகழும்
ஈடு இணை

SHANKAR IAS ACADEMY

**செறியிணைச் சொல்**
பச்சைப் பசேல்

52. **விடை : B**

**பிழை - திருத்தம்**

- ஒருக்கால் - ஒருகால்
- கட்டிடம் - கட்டடம்
- ஊர்வலம் - ஊர்கோலம்

53. **விடை : D**

**பொருள்**

- மறு - குற்றம்
- பரி - குதிரை,சுமை
- படல் - ஓலைக்கதவு
- புரி - கயிறு,ஊர்

54. **விடை : C**

**கலைச்சொல்**

- Ambiguity – பொருள்மயக்கம்
- Antithesis – முரண்கருத்து
- Archaism – வழக்கொழிச் சொல்
- Avant–garde – புத்திலக்கியம்

55. **விடை : C**

- **விரை** என்ற சொல்லின் பொருள் **மணம்**

56. **விடை : A**

- இன்றைய வழக்கில் தன்மை ஒருமை வினைமுற்றில் இடம்பெறும் விகுதி ஏன் என்பது மட்டும்தான்.
- பேச்சு வழக்கில் என் விகுதி ஏன் விகுதியைப் போல் இடம் பெறுவதில்லை. பழைய இலக்கிய வழக்கில்தான் இது கையாளப்படுகிறது.

57. **விடை : B**

- சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.
  (எ.கா.)
  - உள்ளே வரலாம். (இசைவு)
  - இனியன் தலைநகர் போகிறானாம். (தகவல்)/செய்தி
  - பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம். (வதந்தி) / பொய்மொழி

58. **விடை : B**

**தாவர உறுப்புப் பெயர்கள்**

- ஈச்ச ஓலை

SHANKAR IAS ACADEMY

- மாவிலை
- மூங்கில் இலை
- நெற்றாள்

59. **விடை : B**

- பறவைகள் கூட்டமாக பறந்து சென்றன.
- இரு விரல்களைக் காட்டி எது சிறியது? எது பெரியது? என்று கேட்டல்.
- தென்னை மரங்கள் உள்ள பகுதி தென்னத்தோப்பு என்று கூறுதல்
- அங்கே வரும் மனிதர் ஆணா? பெண்ணா? எனக் கேட்டல்

60. **விடை : C**

- பயணம் தரைவழி, கடல் வழி, வான் வழி என மூன்று வகைப்படும்.

61. **விடை : B**

- தொல்காப்பியம் முந்நீர் வழக்கம் என்று கடற்பயணத்தைக் குறிப்பிடுகிறது

62. **விடை : C**

- விளைவு அல்லது முடிவு – Catastrophe
- காரணகாரியம் – Cause and Effect
- செயல்/ நடிப்பு – Action
- எண்ணம் – Thought

63. **விடை : B**

- அவல் என்பதன் பொருள் தான் பள்ளம்.
- மிசை என்பதன் எதிர்ச்சொல் பள்ளம்

64. **விடை : B**

- ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ணகரமாய்த் திரிவதுண்டு.
- நாள் + மீன் = நாண்மீன்

65. **விடை : A**

- குறிப்பு வினை என்பது தெரிநிலை வினையைப் போல் வெளிப்படையாகக் காலம் காட்டாது. பேசுவோர் கேட்போர் குறிப்புக்கு ஏற்ப அது காலங்காட்டுவதாகும்.
- காலம் காட்டும் இடைநிலைகள் குறிப்பு வினைமுற்றுச் சொற்களில் இடம் பெறுவதில்லை.
- இடைநிலைகள் அமைந்த வினைமுற்றுகளை தெரிநிலை வினைமுற்று என்கிறோம்

66. **விடை : D**

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| முன்னிலையில் வரும். | இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். |

SHANKAR IAS ACADEMY

| | |
|---|---|
| ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. | ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும். |
| கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும். | வியங்கோள் வினைமுற்று |
| விகுதி பெற்றும் பெறாமலும் வரும். | விகுதி பெற்றே வரும் |

67. **விடை : B**
- ➢ யாப்பிலக்கணம் – Prosody

68. **விடை : B**
- ➢ நான் சென்றேன்
- ➢ அவை வருகின்றன
- ➢ அது வருகிறது

69. **விடை : C**
- ➢ என் அம்மை வந்தாள் – திணை வழுவமைதி
- ➢ என் அம்மை வந்தாள் என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது திணைவழுவமைதி ஆகும். இங்கு உவப்பின் காரணமாக அஃறிணை, உயர்திணையாகக் கொள்ளப்பட்டது.

70. **விடை : B**

71. **விடை : D**
- ➢ இணைபு – Correlation
- ➢ தொடர்பாடல்- Communication
- ➢ ஒத்தியைபு - Correspondence

72. **விடை : D**
- ➢ விகுதிகளைப் பொறுத்தவரை தெரிநிலை வினையில் வரும் என், ஏன், விகுதிகள் குறிப்பு வினையில் வரும்
  (எ.கா)
  - நான் கரியென் – என்
  - நான் கரியேன் – ஏன்
- ➢ இத்தொடர்களில் கரியென், கரியேன் என்னும் சொற்கள் குறிப்பு வினைமுற்றுகள்.

73. **விடை : D**
- ➢ உவமை - Simile
- ➢ செய்யுள் - Verse
- ➢ உருவகம் - Metaphor
- ➢ யாப்பு - Metre

SHANKAR IAS ACADEMY

74. **விடை : C**
- பணை – மூங்கில்
- வாதி – தருக்கி (வினைச்சொல்)
- வாள் – ஒளி

75. **விடை : B**
- அதிர அடிச்சா உதிர விளையும் – தொடர் முயற்சி வெற்றி தரும்

76. **விடை : C**
- கேலிச்சித்திரம் – Caricature
- சிற்றிதழ்கள் – Little Magazines
- கருத்துப்படம் – Cartoon

77. **விடை : C**
**மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்**
- திருச்சி அருகில் அதவத்தூரில் பிறந்தார்.
- திருவாவடுதுறை மடத்தின் தலைமை புலவராக விளங்கினார்

78. **விடை : B**
- இவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழ் என்ற நூல் இவருடைய பெருமையை உணர்த்தும்.

79. **விடை : B**
- தன்மை வினைமுற்றுகளில் தன்மை என்னும் இடத்தையும், ஒருமையா, பன்மையா என்னும் எண்ணிக்கையினையும் உணர்த்தும் உறுப்பை விகுதி என்கிறோம்

80. **விடை : B**
**விலங்குகளின் வாழிடங்கள்**

| **விலங்குகளின் வாழிடங்கள்** | |
|---|---|
| • ஆட்டுப்பட்டி<br>• கோழிப்பண்ணை<br>• யானைக்கூடம் | • குதிரைக்கொட்டில்<br>• மாட்டுத்தொழுவம்<br>• வாத்துப்பண்ணை |

81. **விடை : A**
- நிர்மலாதான் பாடினாள். (தான் இடைச்சொல்)
- நிர்மலா தானும் பாடினாள். (தான் தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர் பெயர்ச்சொல்)

82. **விடை : D**
- Bibliography – நூல் நிரல்
- Archive – காப்பகம்

SHANKAR IAS ACADEMY

83. **விடை : C**

➢ நடப்பியல் – Realism

84. **விடை : B**

➢ தெரிநிலை வினைமுற்று இடைநிலையால் அல்லாமல், விகுதியைக் கொண்டே காலம் உணர்த்தும்

85. **விடை : C**

➢ புணை – பணைப்பாய்
➢ புடை – பக்கம்
➢ புரி – ஊர்
➢ புனை – விலங்கு

86. **விடை : C**

➢ அறங்கூறும் கவிதை – Didactic
➢ வசனகவிதை – Prose poetry
➢ அகப்பொருள் கவிதை – Subjective
➢ கவிப்பரிவு – Poetic Sympathy

87. **விடை : B**

➢ மண், பொன் - பெயர் இயற்சொல்
➢ அழகு, அன்பு – உரி இயற்சொல்

88. **விடை : B**

தமிழ் இலக்கண விதிகளின்படி, ஒரு செயலைச் செய்பவரைக் குறிக்க 'நர்' என்ற விகுதி சேரும்போது, அந்தச் சொல்லின் இடையில் 'ந்' வருவதுதான் சரியானது.

➢ ஓட்டு + நர் = ஓட்டுநர்
➢ குழு + வ் + இ + நர் = குழுவினர்
➢ ஊர் + இ + நர் = ஊரினர்

89. **விடை : B**

➢ தொடர்களில் சில சொற்கள் இணையாக இடம்பெற்று, பொருளுக்கு வலுவூட்டும். அவற்றை இணைச்சொற்கள் என்கிறோம்.
➢ இவை பொருளுக்கு இனிமையூட்டுகின்றன. இச்சொற்றொடர்களைப் பிரித்தோ, வேறு சொல்லைச் சேர்த்தோ பயன்படுத்தினால், பொருள் தெளிவில்லாமற் போகும்.
   • (எ.கா.) தாய் குழந்தையைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தாள்.

90. **விடை : B**

| | |
|---|---|
| புறமொழி | Parole |
| முரண்பாடு | Paradox |

91. **விடை : B**

➢ றெக்கை, ராக்கி, டப்பா ஆகியவை பிறமொழிச்சொற்களாக உள்ளன.



SHANKAR IAS ACADEMY

92. **விடை : C**

➢ ஞ – வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ ஆகிய நான்கு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்

93. **விடை : B**

ங – வரிசையில் 'ங' என்னும் ஓர் எழுத்து மட்டுமே சொல்லில் முதல் எழுத்தாக வருகிறது. எ.கா–ஙனம்
(இக்காலத்தில் ஙனம் என்னும் சொல் தனித்து இயங்காமல் அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம் என்னும் சொற்களில் மட்டுமே வழங்கி வருகிறது.)

94. **விடை : A**

➢ மொழி முதல் எழுத்துகள் – 22
➢ மொழி இறுதி எழுத்துகள் – 24

95. **விடை : A**

➢ மெய் எழுத்துகள் பதினெட்டும் சொல்லின் இடையில் வரும்.
➢ உயிர்மெய் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.
➢ ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்

96. **விடை : D**

➢ ஈறுபோதல் விதியின்படி மை கெட்டு நிலைமொழியின் இறுதி எழுத்து மகர மெய்யாக இருந்தால் 'முன் நின்ற மெய் திரிதல்' விதியின்படி புணரும்.
  - செந்தமிழ் – செம்மை + தமிழ்
  - செம் + தமிழ் – ஈறுபோதல்
  - செம் + தமிழ் – (ம்–ந்) முன் நின்ற மெய் திரிதல்

➢ ஈறுபோதல் விதியின்படி மை விகுதி கெட்டு, நிலைமொழியின் இறுதி எழுத்து உயிரெழுத்தாய் இருந்து வருமொழி வல்லின மெய்யாக இருப்பின் 'இனமிகல்' விதியின்படி புணரும்.
➢ கருங்கடல் – கருமை + கடல்
  - கரு + கடல் – ஈறுபோதல்
  - கரு + கடல் – (ங்) இனமிகல்

➢ மை விகுதி கெட்டு நிற்கும் நிலைமொழியின் இறுதி எழுத்து மேற்சொன்ன எவ்விதியிலும் பொருந்தாதிருப்பின் இனையவும் என்னும் விதியைப் பயன்படுத்த வேண்டும்.
➢ பைந்தளிர் – பசுமை + தளிர்
  - பசு + தளிர் – ஈறுபோதல்
  - பைசு + தளிர் – அடி அகரம் 'ஐ' ஆதல்
  - பை + தளிர் – இனையவும்
  - பை + தளிர் – (ந்) இனமிகல்

➢ நெடு + இலை – ஈறுபோதல்
➢ நெட்டு + இலை – தன்னொற்றிரட்டல்
➢ நெட்ட் + இலை – உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்

- நெட்டிலை – (ட் + இ) – உடல்மேல் உயிர்வந்து

97. **விடை : D**
- வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் யரழ முன்னர் மெல்லினம் மிகும்.
- 'ய'கர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்
- 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமன்றி மெல்லினமும் மிகும்
- 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.

98. **விடை : D**
- 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.

எ.கா.
- பூ + கொடி = பூங்கொடி
- பூ + சோலை = பூஞ்சோலை
- பூ + தொட்டி = பூந்தொட்டி

99. **விடை : B**
- பெருங்குடி = பெருமை + குடி

100. **விடை : D**
- கலம்பகம் = கலம் + பகம்
- சிலப்பதிகாரம்= சிலம்பு + அதிகாரம்
- திருவருட்பா = திரு + அருள் + பா

101. **விடை : B**
- எம்மருங்கும் = எ + மருங்கும்.

102. **விடை : C**
- கரணத்தேர் = கரணத்து + ஏர்
- நாத்தொலைவில்லை = நா + தொலைவு + இல்லை;
- ஈண்டினியான்=ஈண்டு+இனி + யான்

103. **விடை : C**
- நாழி + உரி = நாடுரி

104. **விடை : A**
- தண்மை + நீர் = தண்ணீர்
- வெம்மை + நீர் = வெந்நீர்

105. **விடை : A**
- பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் தன்னொற்றிரட்டல் என்னும் விதியைப் பயன்படுத்த வேண்டும்.
- வெற்றிலை – வெறுமை + இலை – வெற்று + இலை – வெற்றிலை எனப் புணர்ந்தது.



SHANKAR IAS ACADEMY

106. **விடை : D**
- உம்மைத் தொகையில் திரிபு ஏற்படுமாயின் அங்கு வல்லினம் மிகும். அதாவது திரிந்த வடிவங்களில் வல்லினம் மிகும்
- சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும்

107. **விடை : B**
- வாழ்க்கைப்படகு, வாய்ப்பவளம்- சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும்
- உம்மைத்தொகையில் திரிபு ஏற்படுமாயின் வல்லினம் மிகும்- இரா + பகல் – இராப்பகல்

108. **விடை : D**
- பண்புத் தொகை – வண்ணக்களஞ்சியம்
- உருவகம் – உலகப்பந்து
- உருவகம் – தமிழ்த்தாய்
- உம்மைத்தொகை – தாய்த்தமிழ்

109. **விடை : C**
- திசைப்பெயர்களில் வல்லினம் மிகும் - வடக்குத் தெரு

110. **விடை : C**
- சில + சில = சிலசில, சிலச்சில, சிற்சில

111. **விடை : D**
- சேவடி – செம்மை + அடி
- சே + அடி = சேவடி
- உயிரீற்றுச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

112. **விடை : C**

| | |
|---|---|
| வலி | நோவு; வலிமை |
| வழி | பாதை; பழமை |
| வளி | காற்று |

113. **விடை : B**
- முருகக்கடவுள்; மன்மதன்வேல் - வேள்

114. **விடை : D**
- காடு;வயல்; பூங்கொத்து – வல்லூரம்
- தசை - வள்ளூரம்

115. **விடை : B**
- திருடி – கள்வி
- கருமை; நஞ்சு – காளம்
- பசுக்கூட்டம் – காலி
- சேறு – தொளி

SHANKAR IAS ACADEMY

116. **விடை : D**
- இந்திரன் மகனான வானரன் – வாலி
- ஒருவகைக் காதணி - வாளி
- உருவத்தோடுகூடியது - சகளம்
- எல்லாம் - சகளம்

117. **விடை : C**
- மற்போர் செய்வோர் – மல்லர்
- உழவர் - மள்ளர்

118. **விடை : C**
- ஒரு சாதி, கோயில், சிற்றூர், படுக்கை – பள்ளி
- இலவம் பஞ்சு – பூளை
- வயலைக் கொடி – பசளை
- கருப்பூரம் – பளிதம்

119. **விடை : A**
- கடைவீதி; தானியம் – கூலம்

120. **விடை : B**
- ஒரு நோய் – சூலை
- செங்கற் சூளை – சூளை

121. **விடை : A**
- கரும்பின்கட்டி வெல்லம் எனப்படும்.

| | |
|---|---|
| வெல்லம் | கரும்பின்கட்டி |
| வெள்ளம் | நீர்ப்பெருக்கு |
| வேலை | கடல்; தொழில் |
| வேளை | காலம்; ஒரு பூடு |

122. **விடை : A**
- ஒலி; வறுமை; ஓர்யுகம்' எனும் பொருள் தரக்கூடிய சொல்: கலி

| | |
|---|---|
| **கேழ்** | **ஒப்பு; ஒளி; நிறம்** |
| **கேள்** | கேட்பாய்; உறவு |
| **மால்** | மயக்கம்; திருமால் |
| **மாள்** | அழி |
| **கேழ்** | ஒப்பு; ஒளி; நிறம் |
| **கேள்** | கேட்பாய்; உறவு |

123. **விடை : C**
- தொல்காப்பியர் சுட்டுப்பெயர்களை உயர்திணைக்கு உரிய சுட்டுப் பெயர்கள், அஃறிணைக்கு உரிய சுட்டுப்பெயர்கள் என இரு வகைப்படுத்துகிறார்.
- சுட்டுப்பெயர்களைப் பொறுத்தவரை இடைக்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்ந்தது.

SHANKAR IAS ACADEMY

124. **விடை: C**

- சங்க காலத்தில் அவர் என்பது பலரைக் குறிக்கும் பன்மைச் சுட்டுப்பெயர். ஆனால் அது ஒருவனையோ ஒருத்தியையோ மட்டும் குறிக்கும் உயர்வு ஒருமைப்பெயராகவும் சங்க காலத்தில் வழங்கியது.
- இவ்வாறு உயர்வு காரணமாக ஒருவரை மட்டும் அவர் என்ற சொல் குறிக்கவே, பலரைக் குறிக்க 'அவர்' என்பதோடு 'கள்' விகுதி சேர்த்து, அவர்கள் என்ற பன்மைச் சுட்டுப்பெயர் இடைக்காலத் தமிழில் உருவாக்கப்பட்டு வழங்கி வரலானது.
- மற்ற தன்மை, முன்னிலைப் பன்மைகளில் யாங்கள், நாங்கள், நீங்கள் போன்ற வடிவங்களிலும் கள் விகுதி இருப்பது இங்கே கருதத்தக்கது.
- இடைக்காலத் தமிழில் ஆழ்வார், நாயன்மார் பாடல்களில் அவர்கள் என்னும் வழக்கு மிகுதியாக உள்ளது.

125. **விடை: B**

- சுட்டெழுத்துகள் = அ, இ, உ ஆகும்.

126. **விடை: C**

**அகச்சுட்டு**

- இவன், அவன், இது, அது – இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை.

**புறச்சுட்டு:**

- அவ்வானம், இம்மலை, இந்நூல் – இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.

127. **விடை: C**

- சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே (அகத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும்.
- சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே (புறத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது புறச்சுட்டு எனப்படும்.

128. **விடை: B**

**சுட்டுத்திரிபு:**

- அம்மரம், இவ்வீடு ஆகியவை புறச்சுட்டுகள் என்பதை அறிவோம். இச்சொற்களை அந்த மரம், இந்த வீடு என்றும் வழங்குகிறோம்.
- அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் மாற்றம் பெற்று (திரிந்து) அந்த, இந்த என வழங்குகின்றன.
- இவ்வாறு, அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் அந்த, இந்த எனத் திரிந்து சுட்டுப் பொருளைத் தருவது சுட்டுத்திரிபு எனப்படும்.

129. **விடை: A**

**அகச்சுட்டு**

- இவன், அவன், இது, அது – இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை.

**புறச்சுட்டு:**

SHANKAR IAS ACADEMY

- இவன், இது– இச்சொற்கள் நம் அருகில் (அண்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன.
சேய்மைச்சுட்டு
- அது – இச்சொற்கள் தொலைவில் (சேய்மையில்) உள்ளவற்றைச் சுட்டுகின்றன.

130. **விடை: A**

A) இம்மலை – புறச்சுட்டு
B) அவ்வானம் – புறச்சுட்டு
C) இந்நூல் – புறச்சுட்டு

- அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட ‘உ’ என்ற சுட்டெழுத்து அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
(எ.கா.) உது, உவன்

**புறச்சுட்டு:**

- அவ்வானம், இம்மலை, இந்நூல் – இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.
- இவ்வாறு சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே (புறத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது புறச்சுட்டு எனப்படும்.

131. **விடை: D**

- எந்த என்று வந்தால் அதன் பிறகு ஒருமை வர வேண்டும்
(எ–கா)
  - எந்தப் புத்தகமும் (புத்தகங்களும் என்பது தவறு)
  - எந்த நாட்டிலும் (நாடுகளிலும் என்பது தவறு)

132. **விடை: A**

- நிறைய பிரச்சனைகள் உள்ளன
- அங்கு கிழிந்த துணிகள் குவிந்திருக்கின்றன
- மாடுகள் புல்லை மேய்கின்றன
- கண்ணன் பாடம் படிக்கிறான்

133. **விடை: B**

- புத்தகம், மேசை இரண்டும் அங்கே உள்ளன.
- இங்கு, எழுவாய் (புத்தகம், மேசை) இரண்டு இருப்பதால், பன்மை வந்துவிடுகிறது. எனவே, புத்தகம், மேசை ஆகியவை அங்கே உள்ளன என எழுத வேண்டும்.

134. **விடை: A**

- எழுவாய் பன்மையில் இருப்பின் அவற்றிற்கேற்ற வினைமுடிபும் பன்மையில் இருக்கவேண்டும் என்பதே.
  - கண்ணன் பாடம் படிக்கிறான்.
  - கீரையில் இரும்புச்சத்து உள்ளது.
  - மாணவர்கள் பள்ளிக்குச் செல்கிறார்கள்.
  - வெற்றி பெற்றவர்கள் பரிசு பெற்று மகிழ்ந்தார்கள்.
  - எந்த வீட்டிலும் நூலகம் இல்லை

SHANKAR IAS ACADEMY

135. **விடை: A**

- ஒரு மரம் என்பதுதான் சரி.
- புணர்ச்சியின்படி, ஒன்று + மரம் = ஒரு மரம் என்றே புணரவேண்டும்.
- ஒன்று என்னும் நிலைமொழியின்முன், வருமொழி முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் மட்டுமே ஓர் என மாறும்.
- ஒன்று + ஆடு =ஓர் ஆடு எனப் புணரும். ஒரு ஆடு எனப் புணராது.

136. **விடை: B**

- வீரன், அறிஞர், சிவன், பெருமாள், மக்கள் என்னும் பெயர்கள் மக்களையும் தேவர்களையும் குறிப்பனவாகும்.
- இவர்கள் மற்ற உயிரினும் நன்மை, தீமையைப் பிரித்து அறிவதுடன் உயர்ந்த ஒழுக்கமுடையவர்.
- இங்ஙனம் உயர்ந்த ஒழுக்கம் உடையவரைக் குறிப்பது உயர்திணை.
- புறா, மாடு, நாற்காலி, புன்னை, நிலம், நீர். இவை நன்மை தீமையைப் பிரித்து அறியும் தன்மை இல்லாதவை.
- எனவே இவை அஃறிணை (அல் + திணை) எனப்படும்.

137. **விடை: C**

- ஆசிரியர் ஒருவர் என்பதே சரி, முன்னர்க் கூறிய விதிப்படி, உயிரெழுத்துக்குமுன் ஓர் வரவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.
- ஆயினும், இங்கு எடுத்துக்காட்டப்பட்ட சொல் (ஆசிரியர்), உயர்திணைக்கு உரியது.
- உயர்திணைச் சொற்களுக்குமுன் ஒரு/ ஓர் வரவேண்டியதில்லை.
- அரசன் ஒருவன், பெண்ணொருத்தி, மாணவன் ஒருவன் என்று எழுதினாலே போதும். ஒரு/ ஓர் ஆகிய இரண்டையும் அஃறிணைச் சொற்களுக்குமுன் பயன்படுத்துவோம்.
- இக்காலத் தமிழ் மரபில் இத்தகைய வழக்குத்தொடர் உள்ளது.

138. **விடை: B**

- அறிஞர், கபிலன், சிவன், வள்ளி, வீரன்

139. **விடை: C**

a) மாணவர் – பலர்பால்
b) செடிகள் – பலவின்பால்
c) கபிலன் – ஆண்பால்
d) புறா – ஒன்றன்பால்

140. **விடை: A**

- வீரன், அறிஞர், சிவன், பெருமாள், மக்கள் என்னும் பெயர்கள் மக்களையும் தேவர்களையும் குறிப்பனவாகும்.
- இவர்கள் மற்ற உயிரினும் நன்மை, தீமையைப் பிரித்து அறிவதுடன் உயர்ந்த ஒழுக்கமுடையவர்.

141. **விடை: B**

SHANKAR IAS ACADEMY

- உயர்திணைச் சொற்களுக்குமுன் ஒரு/ ஓர் வரவேண்டியதில்லை.
- ஒரு/ ஓர் ஆகிய இரண்டையும் அஃறிணைச் சொற்களுக்குமுன் பயன்படுத்துவோம்.

142. **விடை: A**

| சுட்டெழுத்துகள் | | | |
|---|---|---|---|
| **திணையும் பாலும்** | **அ** | **இ** | **உ** |
| **உயர்திணை - ஆண்பால்** | அவன் | இவன் | உவன் |
| **உயர்திணை - பெண்பால்** | அவள் | இவள் | உவள் |
| **உயர்திணை - பலர்பால்** | அவர் | இவர் | உவர் |
| **அஃறிணை - ஒருமை** | அது | இது | உது |
| **அஃறிணை - பன்மை** | அவை | இவை | உவை |

143. **விடை: B**

- அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட 'உ' என்ற சுட்டெழுத்து அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
  - (எ.கா.) உது, உவன்

144. **விடை: B**

| | |
|---|---|
| **எழுவாய் தொடரில் உள்ள எழுவாய்ச் சொற்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் வல்லினம் மிகும்** | • **கொக்குப் பறந்தது**<br>• **உப்புக் கரைந்தது** |

145. **விடை: D**

எண்கினங்கள் = எண்கு + இனங்கள்

146. **விடை: B**

ஈறு போதல் இடைஉகரம் **இய்யாதல்**
ஆதி நீடல் அடிஅகரம் ஐ ஆதல்
தன்னொற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்
இனம் மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே (நன்னூல்-136)

147. **விடை: A**

| | |
|---|---|
| **ஆலம்** | **விடம், ஒரு மரம், மழைநீர், அம்புக்கூடு** |
| **கண்டம்** | கழுத்து, ஆபத்து, நிலப்பெரும் பிரிவு |
| **காடு** | கா, கால், கான், கானகம், அடவி, அரண், ஆரணி, புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம், முளரி, வல்லை, விடர், வியல், வனம், முதை, மிளை, இறும்பு, சுரம், பொச்சை, பொதி, முளி, அரில், அறல், பதுக்கை, கணையம். |
| **உரை** | சொல், தேய் |

148. **விடை: B**

- 'மருள்' என்பதன் எதிர்ச்சொல் – தெளிவு

| | |
|---|---|
| மருள் | ஒன்றைப்பற்றித் தெளிவாகத் தெரியாத மயக்க நிலை |
| தெருள் | மருள் என்பதன் எதிர்நிலை, தெளிவடைதல் |



SHANKAR IAS ACADEMY

149. **விடை: B**

➢ "ஸ்பா" என்பதற்கு இணையான தமிழ்ச்சொல் – சபா

| | |
|---|---|
| **ஸ்பா** | **சபா** |
| **தபசு** | தபஸ் |
| **சபை** | அவை |

150. **விடை: A**

➢ ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, தனிநிலைத்தொடர்.
(எ.கா.)
- இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.
- வீரன் யானையைக் கொன்றான்.
- பூனை பாலைக் குடித்தது.

151. **விடை: C**

| அட்டெண்டன்ஸ் | வருகைப் பதிவு |
|---|---|
| கர்னன் | கன்னன் |
| தீக்கை | பிச்சை |
| அலமாரி | நிலைப்பேழை |

152. **விடை: D**

➢ ஒரு தனிச்சொற்றொடர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட துணைத் தொடர்களுடன் கலந்து வருவது, கலவைத்தொடர்.
➢ ஒரு முதன்மை வாக்கியத்துடன் ஒன்று அல்லது பல சார்பு வாக்கியங்கள் இணைந்து வருவது கலவை வாக்கியமாகும்.
➢ எ.கா: "தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்று, அதன்வழி நடந்து, வாழ்க்கையில் அனைவரும் முன்னேற முயல வேண்டும்"

153. **விடை: D**

| **எகினம்** | **அன்னம், நீர்நாய், புளியமரம்** |
|---|---|
| **ஏறு** | காளை, ஆண் சிங்கம், மேலே செல் |
| **ஏனம்** | பாத்திரம், பன்றி |
| **ஈ** | கொடு, பறவை, இரத்தல், அழிவு |
| **உரம்** | எரு, ஞானம், மதில், வலிமை |
| **காயம்** | பெருங்காயம், புண், உடல், நிலைபேறு |

154. **விடை: B**

➢ "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்று மகாகவி பாரதியார் முழங்கியிருக்கிறார்.

155. **விடை: D**

➢ Pay Special attention – தனிக் கவனம் செலுத்துக
➢ Walked out – 'வெளியேறினர்' அல்லது 'வெளியேறி விட்டனர்'
➢ Citizenship Training – குடிமைப் பயிற்சி



SHANKAR IAS ACADEMY

- Bibliothque Nationale – தேசிய நூற்கூடம்

156. **விடை: D**

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

**பொருள்:**

- செயலின் வலிமையும் தன் வலிமையும் பகைவனுடைய வலிமையும் ,இருவருக்கும் துணையானவரின் வலிமையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

157. **விடை: B**

- மன உளைச்சல் தீரவும், வீட்டில் உலை கொதிக்கவும், உழைக்க வேண்டும்.

158. **விடை: D**

- அறுவடைத் திருநாள் ஆந்திரம், கர்நாடகம், மராட்டியம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மகரசங்கராந்தி என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.
- பஞ்சாப் மாநிலத்தில் லோரி என்று கொண்டாடப்படுகிறது.
- குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் உத்தராயன் என்று கொண்டாடப்படுகிறது.

159. **விடை: C**

| ஆக்ஸிடெண்ட் | நேர்ச்சி |
|---|---|
| **கிளாத் ஸ்டோர்ஸ்** | துணியங்காடி |
| **சாதம்** | சோறு |
| **சிபாரிசு** | பரிந்துரை |
| **சேவை** | தொண்டு |
| **ஜாக்கிரதை** | விழிப்பு |

160. **விடை: C**

- **நாட்டுப்புற பாடல்கள்**
  - தாலாட்டுப் பாடல்கள்
  - விளையாட்டுப் பாடல்கள்
  - தொழில் பாடல்கள்
  - சடங்குப் பாடல்கள்
  - கொண்டாட்டப் பாடல்கள்
  - வழிபாட்டுப் பாடல்கள்
  - ஒப்பாரிப் பாடல்கள்

161. **விடை: C**

- இவ்வரி நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் எழுதிய "காந்தியடிகள் வழி" பற்றிய பாடலில் இடம்பெற்றுள்ளது.

  "அருள்நெறி அறிவைத் தரலாகும் - அதுவே தமிழன் குரலாகும்
  கொல்லா விரதம் குறியாகக் கொள்கை பொய்யா நெறியாக
  எல்லா மனிதரும் இன்புறவே என்றும் இசைந்திடும் அன்பறமே"

SHANKAR IAS ACADEMY

162. **விடை: B**
- குற்றேவல் = குறுமை + ஏவல்.
- குறுமை = சிறிய (குறுகிய).
- ஏவல் = பணி/வேலை.
- இதன் எதிர்ச்சொல்: நெட்டேவல் (நெடுமை + ஏவல்) அல்லது பெரிய வேலை.

163. **விடை: B**
- ஒரு வாக்கியத்தில் இரண்டு கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணாகவோ அல்லது மாறுபட்டோ வரும்போது, அவற்றை இணைக்க "ஆனால்" என்ற இணைப்புச்சொல்லையே பயன்படுத்த வேண்டும்.

164. **விடை: A**

165. **விடை: C**

166. **விடை: A**
- அஃறிணைப் பெயர்களின் இறுதியில் நிற்கும் மகர எழுத்திற்குப் பதிலாக னகரம் கடைப்போலியாக வரும். லகர எழுத்திற்குப் பதிலாக ரகரம் கடைப்போலியாக வரும்.

167. **விடை: B**
- வடமொழியில் 'கிராமம்' என்று அழைக்கப்படுவதன் நேரடித் தூய தமிழ்ச்சொல் 'சிற்றூர்' என்பதாகும்.

168. **விடை: A**
- மூன்று' என்ற சொல் 'மூணு' என மாறுவது ஒரு பேச்சு வழக்கு அல்லது வட்டார வழக்குச் சொல்லே தவிர, அது இலக்கண ரீதியான முற்றுப்போலி அல்ல.
- முற்றுப்போலிக்குச் சரியான உதாரணம்: ஐந்து - அஞ்சு. இதில் சொல்லில் உள்ள அனைத்து எழுத்துக்களும் மாறினாலும் (ஐ, ந், து _ அ, ஞ், சு) அது அதே 'ஐந்து' என்ற பொருளையே தருகிறது.

169. **விடை: A**

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

170. **விடை: D**
- நோன்மை என்பதன் சரியான பொருள் 'வலிமை' அல்லது 'பொறுமை' (தவம்/நோன்பு ஆகியவற்றால் கிடைக்கும் உறுதி) என்பதாகும்.
- 'வறுமை' என்பதைக் குறிக்கும் சொற்கள்: நல்குரவு, இன்மை போன்றவை.

171. **விடை: B**



SHANKAR IAS ACADEMY

- இச்சொல்லுக்கு 'உறங்குதல்' என்ற பொருளும் உண்டு. ஒரு மனிதன் தன் கடமையைச் செய்யாமல் உறங்குவது அல்லது காலத்தைக் கடத்துவது 'சோம்பல்' எனக் கருதப்படுகிறது.

172. **விடை: C**

173. **விடை: D**

**மழைக்கால மலர்கள்:**

- காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம்.

174. **விடை: C**

175. **விடை: C**

- ஒரு சொல்லின் எந்த இடத்தில் (முதல், இடை, இறுதி) எழுத்து மாறினாலும், அதற்குப் பொதுவான பெயர் 'போலி' என்பதாகும்.

176. **விடை: B**

- ஏணம் என்பதன் சரியான பொருள் 'அழகு' என்பதாகும்.

177. **விடை: B**

- பிரான்சு நாட்டின் தேசிய நூலகத்தில் உள்ள தமிழ் நூல்கள் குறித்து ஆய்வு செய்து, அங்குள்ள அரிய தமிழ் நூல்களின் பட்டியலை வெளியிட்டவர் நிக்கலஸ் ஸ்ரனிசுலா ஆவார்.

178. **விடை: D**

- இங்கு 'சுடுதல்' என்பது துப்பாக்கியால் சுடுவதைக் குறிக்கிறது.
- இங்கு 'சுட்டல்' என்பது சுட்டிக்காட்டுதலை குறிக்கிறது. ஒருவர் செய்த பிழையைச் சுட்டிக்காட்டினால் மட்டுமே அவர் அதனைத் திருத்திக்கொள்ள முடியும்.

179. **விடை: C**

- ஐஸ்வாட்டர் = குளிர்நீர்
- கூல்டிரிங்ஸ் = குளிர்சாறு
- பூஜைக்கு = வழிபாட்டிற்கு (வழிபாடு)
- புஷ்பத்தை = புட்பத்தை (மலர்/பூ) - இதில் 'புட்பம்' என்பது தூய தமிழ்ச்சொல்லாகக் கையாளப்படுகிறது.

180. **விடை: B**

- ஒரு எழுவாய் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தால் அது தனி வாக்கியம் எனப்படும்.
- ஒரு எழுவாய் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தால் அது தனி வாக்கியம் எனப்படும்.

SHANKAR IAS ACADEMY

181. **விடை: D**

- இது செய்யுள் அல்லது இலக்கியத்தில் ஒரு பாடல் அடுத்த பாடலோடு கதை அல்லது பொருள் அடிப்படையில் தொடர்புடையதாக அமைவதைக் குறிக்கும் (எ.கா: சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்கள்).

182. **விடை: D**

- 'கிராமம்' என்பது சமஸ்கிருத மொழியிலிருந்து பெறப்பட்ட சொல்லாகும்.

183. **விடை: B**

- செய்வினைத் தொடரில் செயப்படுபொருளோடு இரண்டாம் வேற்றுமை உருபான 'ஐ' வெளிப்பட்டோ அல்லது மறைந்தோ வர வேண்டும்.
  - (எ.கா: கவிதா உரையைப் படித்தாள் - இங்கு 'ஐ' வெளிப்படையாக வந்துள்ளது).

184. **விடை: B**

- சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதை பகுதியில் தமிழிசை குறித்த நுட்பமான தகவல்கள் இடம் பெற்றுள்ளன.
- குழல் (புல்லாங்குழல்) மற்றும் யாழ் ஆகிய கருவிகளிலிருந்து பிறக்கும் இசையானது, மனிதக் குரலிலிருந்து பிறக்கும் ஏழு இசைகளை (சுரங்களை) அடிப்படையாகக் கொண்டது என்று விவரிக்கப்படுகிறது.

185. **விடை: A**

- **முகட்டில் மேகம் தங்கும்:** மலை உச்சிகளில் மேகங்கள் வந்து நிலைபெற்று நிற்பதைக் குறிக்க 'தங்கும்' என்ற சொல் மிகவும் பொருத்தமானது.
- **மனங்கள் செல்லத் தயங்கும்:** அந்த அழகிய காட்சியைக் காணும்போது, அவ்விடத்தை விட்டுச் செல்ல மனமில்லாமல் மருகி நிற்பதை 'தயங்கும்' என்ற சொல் அழகாக விவரிக்கிறது.

186. **விடை: B**

- ஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை'.

187. **விடை: C**

- திருக்குற்றாலக் குறவஞ்சி நூலில் குற்றால மலையின் சிறப்புகளைக் கூறும்போது, அவ்விடம் "தென் ஆரிநாடு" என்று அழைக்கப்படுகிறது.

188. **விடை: B**

- "கான மஞ்ஞை யறையீன் முட்டை" - காட்டில் வாழும் மயில் பாறையின் மேல் இட்ட முட்டை என்பது இதன் பொருளாகும்.
  - **மஞ்ஞை:** இச்சொல் சங்க இலக்கியங்களில் மயிலைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு அழகான தமிழ்ச்சொல்.
  - **கானம்** - காடு
  - **அறை** - பாறை
  - **ஈன்** - இடுதல்/பெறுதல்

SHANKAR IAS ACADEMY

189. **விடை: C**

➢ அயம் என்பதன் சரியான பொருள் 'ஆடு' அல்லது 'குதிரை' என்பதாகும்.

190. **விடை: C**

➢ தணிப்பரிய = தணிப்பு + அரிய
➢ **விதி 1 :** "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்"
  - தணிப்பு + அரிய, நிலைமொழி இறுதியில் உள்ள 'பு' என்ற எழுத்தைப் பிரித்தால் ப் + உ என்று வரும். வருமொழி முதலில் 'அ' (உயிரெழுத்து) வருவதால், நிலைமொழி ஈற்று 'உ' மறைந்துவிடும்.
  - இப்போது சொல்: தணிப்+ப் + அரிய என்று நிற்கும்.
➢ **விதி 2:** "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே"
  - நிலைமொழியின் இறுதியில் உள்ள மெய்யெழுத்து (ப்), வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்தோடு (அ) சேரும்.
  - ப் + அ = ப, எனவே, தணிப்பரிய என்று புணரும்.

191. **விடை: D**

192. **விடை: B**

➢ திருமுக்கூடல்: தாமிரபரணி, சித்தாறு மற்றும் கடனாநதி ஆகிய மூன்று ஆறுகள் சங்கமிக்கும் இடமான திருமுக்கூடல் (திருநெல்வேலி அருகே உள்ளது), வரலாற்று ரீதியாக 'சீவலமங்கை சீவலம்பேரி' என்று அழைக்கப்படுகிறது.
➢ இப்பெயர் இப்பகுதியை ஆண்ட பாண்டிய மன்னர்களின் பெயரோடு (சீவலமாறன்) தொடர்புடையது எனக் கருதப்படுகிறது.

193. **விடை: B**

➢ பழங்காலத்தில் செம்பு அல்லது பொன்னால் செய்யப்பட்ட நாணயங்களை (Coins) 'பணங்கள்' என்று அழைத்தனர்.

194. **விடை: C**

➢ ஒரு காரணத்தை அடுத்து அதன் விளைவாக எடுக்கப்பட்ட முடிவைக் கூறும்போது 'எனவே' என்ற இணைப்புச் சொல்லே மிகவும் பொருத்தமானது.

195. **விடை: B**

➢ நாகம் இடியோசையைக் கேட்டது. (தனி வாக்கியம்
➢ நாகம் நடுநடுங்கியது. (தனி வாக்கியம்

196. **விடை: D**

➢ நாஞ்சி என்பது நாஞ்சில் நாடு (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம்) பகுதியைக் குறிக்கும்.

SHANKAR IAS ACADEMY

197. **விடை: C**

198. **விடை: B**

- பழந்தமிழில் 'வதுவை' என்ற சொல் திருமணத்தை (Marriage) குறிக்கும் மிக முக்கியமான சொல்லாகும்.

199. **விடை: C**

- "நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு"
- இப்பாடல் வரிகள் ஔவையார் இயற்றிய நல்வழி என்னும் நீதி நூலில் இடம்பெற்றுள்ளன.

200. **விடை: B**

- பதின் + எண்: இது 'பதினெண்' (18) எனப் புணரும்.
- கீழ் + கணக்கு: இது 'கீழ்க்கணக்கு' எனப் புணரும்.
- ஒட்டுமொத்தமாக, பதின் + எண் + கீழ் + கணக்கு எனப் பிரிப்பதே மிகவும் துல்லியமானது. ஏனெனில், இதில் உள்ள ஒவ்வொரு சொல்லும் தனித்தனிப் பொருள் உடையவை (பதின்=பத்து, எண்=எட்டு, கீழ்=குறைந்த அடிகள் கொண்ட, கணக்கு=நூல்).
- **இலக்கண விதிகள்:**
- பதின் + எண் = பதினெண்: இங்கு நிலைமொழி ஈற்று 'ன்' கெடாமல், வருமொழி முதலெழுத்தான 'எ' (உயிரெழுத்து) உடன் இணைந்து 'நெ' என மாறியுள்ளது (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே).
- கீழ் + கணக்கு = கீழ்க்கணக்கு: நிலைமொழி ஈற்றில் 'ழ்' இருந்து, வருமொழி முதலில் 'க' (வல்லினம்) வரும்போது இடையில் 'க்' மிகுந்து புணரும்.

*********

SHANKAR IAS ACADEMY